






# ஆசார்யர்களின் க்ரந்த முத்துக்கள்

தொகுத்தளிப்பவர் : கீ ப ரா வி

மலர் 1 இதழ் 13 26.03.2025



**ஸ்ரீமதே ஸ்ரீ வராஹமஹாதேசிகாய நமః**

**ஆசார்ய தேவோ பவ**

# உள்ளே....

## படிக்க வேண்டிய உபதேசங்கள்


1. கைகேயி தசரதனிடம் கேட்ட இரு வரங்கள்
2. குரு வந்தனம்
3. சீதையும் வால்மீகியும்
4. உண்மையான ஜனநாயகம்
5. துமி
6. மித்ரனும் விஸ்வாமித்ரனும்
7. வைதீக கர்மாக்கள்
8. அயோநிஜய்
9. யானும் நீயே என்னுள் உறைதலின்
10. தினமும் அனுசந்திபோம்
11. பரதன் சரணாகதி
12. ஸ்ரீ பாதுகா ஸஹஸ்ரம் - கார்யஸித்தி ஸ்லோகங்கள்

## கைகேயி தசரதனிடம் கேட்ட இரு வரங்கள்

கைகேயி தசரதனிடம் இரு வரங்கள் கேட்டதிற்கான மற்றொரு (உள்ளார்ந்த) விளக்கம்:- ஆட்சிபுரியும் அரசர்களுக்கு "உயிர் ஆபத்து" என அரண்மனை ஜோஸ்யர் கூற, கைகேயி அறிந்திருக்கிறாள். தன் மகனுக்கும் மேலாக ராமனை நேசித்து கைகேயி வளர்த்து வந்திருக்கிறாள். தன் மகன் பரதனை பலியிட்டாவது ராமனைக் காப்பாற்ற எண்ணினாள். அதன் காரணமாக ராமனை ஈரேழு ஆண்டுகள் வனவாஸம் போகவும், பரதனுக்கு முடி சூட்டவும், இரு வரங்களைக் கேட்டாள்.

அந்த சமயத்தில் ஆட்சியிலிருந்த போது மாண்டவர்கள்:
1) தஸரதன் 2) வாலி 3) ராவணன்

14 ஆண்டு ஆட்சி புரிந்த பாதுகையோ மரத்தினால் ஆனது. அதனால் கிருஹங்களின் சாரம் பாதுகையை பாதிக்கவில்லை. பரதன் ஆட்சியை ஏற்காததால் அவனுக்கும் பாதிப்பு இல்லை.
+++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++

## குரு வந்தனம்

குருகுல வாஸம் முடிந்ததும் இரு சீடர்கள் தத்தம் ஊருக்கு திரும்புகிறார்கள். வழியில் ஓர் சந்திப்பில் தனித் தனியாகப் பிரிந்து செல்ல வேண்டும். அதற்கு முன்பு தாங்கள் கற்ற வித்யையை சோதித்துப் பார்க்க விரும்பினார்கள்.

ஒரு சிஷ்யர் ஓர் மந்த்ரத்தை ஒரு காய்ந்த கட்டையின் மேல் ப்ரயோகிக்கிறார். அம்மந்திரத்தின் மஹிமையால் தீப்பற்றி கொள்ள வேண்டும். அதற்கு பதிலாக புகை மட்டும் கிளம்புகிறது.

மற்றொரு சிஷ்யர் அதே மந்த்ரத்தை மற்றொரு காய்ந்த கட்டையின் மேல் ப்ரயோகிக்க தீப்பற்றி கொழுந்து விட்டு ஜ்வலிக்கிறது.

இதன் காரணம் இந்த சிஷ்யர் "குரு வந்தனம்" செய்து விட்டு மந்த்ரத்தை ப்ரயோகித்தார். அதனால் முழுமையான பலன் கிடைத்தது.
++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++

# சீதையும் வால்மீகியும்

சீதை மிதிலையில் ஜனகருக்கு பூமியிலிருந்து கிடைத்த மண் மடந்தை. வால்மீகியும் மண் புற்றிலிருந்து தோன்றியவர்.அதனாலும் வயது க்ரமத்தினாலும் தந்தையைப் போன்றவர். சீதையான பெண் பேறு காலத்தில் வால்மீகியின் ஆச்ரமத்திற்கு வந்து சேர்ந்தது தன் பிறந்த வீட்டிற்கு வந்ததைதை ஒக்கும்.

லக்ஷ்மணன் சீதையை தேரில் அழைத்துக் கொண்டு காட்டிற்கு வந்தான். லக்ஷ்மணனான ஆதிசேஷன் பூர்வ ஜன்மத்தில் புற்று வாசிதானே! அதனால் சகோதரன் சகோதரியை பிறந்த வீட்டிற்கு ப்ரஸவத்திற்காக அழைத்து வந்தது போல் ஆயிற்று.

+++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++

# உண்மையான ஜனநாயகம்

சபரி என்கிற வேடுவப் பெண் மதங்க முனிவருக்கு சேவை செய்து வந்தாள். பகவான் ஸ்ரீராமனாக அவதரித்து வனவாஸம் வரப் போவதையும் முனிவர் வாயிலாக அறிந்திருந்தாள். முனிவர் தான் மோக்ஷத்திற்கு எழுந்தருளும்போது, சபரியையும் மோக்ஷத்திற்கு வர சம்மதமா? என்று கேட்க சபரியோ மோக்ஷத்தைவிட ஸ்ரீ ராமனை நேரில் தர்ஸிப்பதே சிறந்தது என்று எண்ணினாள்.

ஸ்ரீராமன் நேரில் எழுந்தருளியதும் அவருக்கு பழங்கள் கொடுத்து உபசரித்தாள். பிறகு பூதவுடலை விட்டு மோக்ஷம் எய்தினாள். இதில் கவனிக்கத்தக்கது.

சபரிக்கு ஸ்ரீ ராமன் மோக்ஷம் கொடுக்கவில்லை. ஆனால் சபரியின் மோக்ஷத்திற்கு சாக்ஷி பூதனாக விளங்கினார் என்பதுதான் ராமாயணம்.

+++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++



## துமி

கம்பர் தனது ராமாயணத்தில் "துளி" என்ற பதத்திற்கு பதிலாக துமி என்று தனது பாடலில் எழுதியிருப்பதை ஒட்டக்கூத்தர் சுட்டிக் காட்டி தவறு என்கிறார். கம்பரோ அது உலக வழக்கு என்கிறார்.உலக வழக்கு என்பதை நிரூபிக்க தான் வணங்கும் காளியை வேண்ட, அந்த தெய்வமோ மறுநாள் காலையில் ஒரு குறிப்பிட்ட இல்லத்திற்கு வரும்படி கூறுகிறார். அதன்படி கம்பரும் ஒட்டக்கூத்தரும் அந்த இல்லத்திற்கு செல்ல காளியே தாயாக வெண்ணெய் கடைய, அருகிலிருந்து குழந்தைகளைப் பார்த்து 'துமி தெறிக்கப்போகிறது, விலகியிருங்கள்' என்று கூற உலக வழக்கு நிரூபிக்கப்படுகிறது.

++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++

## மித்ரனும் விஸ்வாமித்ரனும்

மித்ரன் என்றால் சாதாரணமாக நண்பன் என்று பொருள். அதே சொல் ஸூரியனையும் குறிக்கும். ஸூ ரியன் இல்லா விட்டால் உலகில் எந்த ஜீவனும் உயிர் வாழ முடியாது. அதனால் ஸூரியன் சகல உயிர்களுக்கும் மித்ரன் ஆகிறான்.

விஸ்வாமித்ரனோ காயத்ரி மந்த்ரத்தை உண்டாக்கினார். அதை ஜபிப்பவர்களுக்கு சகல சௌபாக்யங்களும் கிட்டும். அதனால் முதலில் 'கௌசிகன்" ஆக இருந்தவர் விஸ்வாமித்ரராக கொண்டாடப்படுகிறார்.

++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++

## வைதீக கர்மாக்கள்

எல்லா வைதீக கர்மாக்களும் ஆசமனத்தில் ஆரம்பித்து ஆசமனத்திலேயே முடிக்கப்படுகின்றன. இதே போல் ஒவ்வொரு சங்கல்பமும் ப்ராணாயாமத்திலிருந்து தான் ஆரம்பிக்கப்படுகிறது. ஒரு சந்த்யா வந்தனத்தில் 15 முறை ப்ராணாயாமம் செய்கிறோம். இது "காலாதீத ப்ராயச்சித்தார்த்த"த்திற்கான சங்கல்பம் உள்பட செய்யும் ப்ராணாயாமங்களின் எண்ணிக்கை. எல்லா வைதீகக் கர்மாக்களும் 'ஸர்வம் ஸ்ரீ க்ருஷ்ணார்ப்பணமஸ்து" என்று அர்க்யத்துடன் நிறைவு பெறுகிறது.

++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++

## அயோநிஜய்

சீதையும், ஆண்டாளும் பூமியிலிருந்து அவதரித்தவர்கள். தாயார் கர்ப்பத்திலிருந்து பிறந்தவர்கள் அல்ல. இப்பேர்ப்பட்டவர்களுக்கு இறப்பு என்பது கிடையாது. சீதை பூமிக்குள் திரும்பப் ப்ரவேசித்தாள். ஆண்டாளோ ரெங்கனாதருடன் இரண்டற கலந்து விட்டாள். திருப்பாணாழ்வாரும் தாயின் கர்ப்பத்திலிருந்து பிறந்தவர் அல்ல. அதனால் அவரும் ரெங்கனாதருடன் இரண்டறக் கலந்து விட்டார்.





+++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++

## யானும் நீயே என்னுள் உறைதலின்

ஸர்வேஸ்வரன் இட்ட வழக்காகவே அனைத்தும் ஸர்வ பதார்த்தங்கள், ஸர்வோபாயங்கள் அவற்றின் ஸஹகாரியான தர்மங்கள் -இருப்பதைப் பார்த்து அந்த புருஷார்த்தங்களை அநுப விக்கின்றவனாயும் அவற்றின் கர்த்தாவாக இருக்கும் ஸ்திதியையும் உணர்ந்து தானும் அவனே என்று அருளிச் செய்கிறார்.

கறந்த பாலுள் நெய்யே போலே எங்களுட்புகுந்து அந்தர்யாமியாய் நிற்பதால் எங்களைக் காட்டும் சப்தங்களாலும் நீயே கூறப்படுகின்றாய்.

இப்ரபஞ்சத்தில் உனக்கு உரிமையாகாத வஸ்து என்று ஒன்று உண்டா? இல்லை. எனவே, அனைத்துக்கும் அதிபதியாய் நிற்பவன் நீயே என்று கூறி புளகாங்கிதம் அடைகிறார்.

நமச் சப்தார்த்தின் பொருளை விளக்கும் பாசுரம் இது. அவனே ஸர்வசேஷி. நாம் சேஷபூதர்கள், நாம் ஸ்வதந்த்ரர்கள் அல்ல. பரதந்த்ரர்கள். இதனை விளக்குவதே இதன் பொருள்.

....மும்மணிக்கோவை

# தினமும் அனுசந்திபோம்

தொண்டருகக்கும் துணையடி வாழி! நின் தூமுறுவல்
கொண்டமுகம் வாழி, வாழி வியாக்கியா முத்திரைக்கை**
வண்திருநாமமும் வாழி, மணிவட முப்புரிநூல்
கொண்ட சீர்தூப்புல் குலமணியே* வாழி நின்வடிவே. 19

'विग्रहालोकनपरः' என்றபடி ஆசார்யர்களுடைய திருமேனியும் ஸிஷ்யர்களின் த்யானத்திற்கு அவசியமானது என்ற ஸாஸ்திரத்திற்கு இணங்க இப்பாசுரத்தில் ஸ்ரீதேஸிகனுடைய வடிவுக்கு மங்களாணாஸனம் செய்கிறார். அடியார்கள் மிக விரும்பும் ஸ்ரீதேஸிகனின் திருவடிகள் வாழி, எப்பொழுதும் புன்முறுவல் பூத்த திருமுகமண்டலம் வாழி, வியாக்யான முத்திரையுடன் கூடிய திருக்கை வாழி, திருமேனியில் அணிந்த திருமண்காப்புகளும் திருமணித் தாழ்வடங்களும் யஜ்ஞோபவீதமும் வாழி, இவை யெல்லாம் கொண்ட திவ்ய மங்கள விக்ரஹம் வாழி.

வடிவழகார்ந்த, வண்தூப்புல் வள்ளல் மென்மலரடிமேல்*
அடியவரோத, அந்தாதி இருபதும் ஆய்ந்து உரைத்தேன்**
திடமுடன் இதைத் தினந்தோறும் ஆதரித்து ஓதும் அன்பர்,
முடியிடை நேர்படும்* தூப்புல் அம்மான் பதமாமலரே. 20

அழகிய திருமேனியையுடைய தூப்புலில் தோன்றிய வள்ளல் ஸ்ரீதேஸிகனின் திருவடிகள் விஷயமாக, ஸ்ரீ தேஸிகன் அடியார்களுக்கு நித்யம் அனுஸந்தேயமாய் இருக்கும்படி ஸாஸ்திரங்களை ஆராய்ந்து அவற்றின் பொருளை அமைத்து அந்தாதித் தொடையாலே இருபது பாசுரங்களைப் பாடினேன். பூர்ண விஸ்வாசத்துடன் இப்பிரபந்தத்தை தினந்தோறும் போற்றி அனுஸந்திக்கும் பக்தர்களின் ஸிரஸில் ஸ்ரீதேஸிகன் திருவடிகள் சேரும்.

*****************************************************





# பரதன் சரணாகதி

ராமன் பதினான்கு வருஷங்கள் முழுவதும் வனத்திலிருப்பதாகத் தீர்மானம் செய்தபடியால், பித்ருவாக்ய பரிபாலனம் செய்ததாக ஆகி றது. பதினான்கு வருஷம் கழிந்து திரும்பி வந்து பூமிக்கு ராஜாவாக இருப்பதை ஒப்புக்கொண்டபடியால் வஷிஷ்டரும் கௌஸல்யையும் முன் வேண்டினதையும், பரதன் சரணாகதிபண்ணி பிரார்த்தித்ததையும் செய் ததாக ஆய்விட்டது. வனத்தில் பதினான்கு வர்ஷங்கள் இருக்கவேண் டியதாகையால் பாதுகைவழியாக ராஜ்யம் ஒப்புக்கொள்ளப்பட்டது. பரதன் உடனே திரும்பி அயோத்யைக்கு வரும்படி வேண்டின அம்சம் நிறைவேறாததற்குக் காரணம், பித்ருவாக்ய பரிபாலனமும், தேவர்கள் முன்னால் பண்ணின சரணாகதியும், அதன்படி ராவணன் முதலான ராக்ஷஸர்களை ஸம்ஹாரம்  செய்ய ஒப்புக்கொண்டதுமாம். அந்த வியா பாரம் முடிகிறவரையில் பரதன் சாணாகதிக்குப் பலம் தாமதித்தது

*********************************************************************************



**ஸ்வாமி நிகமாந்த மஹாதேசிகனின்**

# ஸ்ரீ பாதுகா ஸஹஸ்ரம்

**(1008 ஸ்லோகங்களில் கார்யஸித்தி ஸ்லோகங்கள்)**



**ஸர்வகார்ய ஸித்தியும் ஸ்ரீபாதுகா ஸஹஸ்ரமும்**

**ச்லோகம்:**

**1. ஸந்த- பாகவத அபிமானம் பெற,**

**14. ரங்க- வாக்குவன்மை பெற,**

**92. க்ஷணம்- பிறர் இகழும் நிலை நீங்க,**

**96. தன்யா - ஏழைமை நீங்க,**

**153. வர்ஷாணி- குழந்தைகள் க்ஷேமம் பெற**

**359. தத்ரஜஸ்-அவதூறு நீங்க,**

**387. மதுவைரி-தீராத துக்கத்திற்குப் பரிஹாரமாக,**

**408. ச்ருணோது-செய்யும் ப்ரார்த்தனைகள் நற்பலனளிக்க,**

**749. கநகருசிரா-க்ரஹங்களின் தசாபுக்திதோஷம் நீங்க,**

**750. ப்ரஜ்வலி-லக்ஷ்மீ ஸாந்நித்யம் பெற,**

**762. மணிபாதுகயோர்-பாபம் செய்தவர் ஜபிக்க,**

**763. சரணௌ- பஞ்சம், போர் போன்ற தீமை அகல,**

**779. அப்ராப்தானாம்- ஸ்திரமான செல்வம் பெற,**

**780. பத்தஹரி-நீதி ஸ்தலங்களில் ஆபத்துவராதிருக்க,**

**828. ப்ரதிபத-உயர்ந்த உத்யோகம் பெற,**

**869. சுபப்ரணாதா - விரைவில் விவாஹம் நடைபெற,**

**949. தாரஸ்- நல்லதே காதில் விழ,**

**1008. ஜயதி - வெற்றியையே எங்கும் காண.**

**********************************